**செ.வெ.எண்: 64** **நாள்: 31.10.2016**

**பத்திரிகைச்செய்தி**

**விளையாட்டுப்பள்ளி/விளையாட்டு விடுதிகளுக்கிடையே மாநில அளவிலான கையுந்துபந்து விளையாட்டுப் போட்டிகள் -2016-17**

2016-17-ம் ஆண்டிற்கு விளையாட்டுப் பள்ளி மற்றும் விளையாட்டு விடுதிகளுக்கிடையே மாநில அளவிலான கையுந்துபந்து விளையாட்டுப் போட்டிகள் 04.11.2016 முதல் 06.11.2016 முடிய புதுக்கோட்டை மாவட்ட விளையாட்டரங்கில் மாணவ, மாணவிகள் இருபாலருக்கும் 17 வயதுக்குட்பட்டோர் மற்றும் 19 வயதுக்குட்பட்டோர் பிரிவுகளில் நடத்தப்படவுள்ளது.

மாணவர்கள் பிரிவில் திருநெல்வேலி, கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி மற்றும் தஞ்சாவூர் மாவட்ட விளையாட்டுப் பள்ளி/விளையாட்டு விடுதி மாணவர்கள் கலந்து கொள்ள உள்ளார்கள்.

மாணவிகள் பிரிவில் சென்னை, ஈரோடு, நாகர்கோயில், தேனி மற்றும் தர்மபுரி மாவட்ட விளையாட்டுப் பள்ளி/விளையாட்டு விடுதி மாணவிகள் கலந்து கொள்ள உள்ளார்கள்.

போட்டிகள் லீக் சுற்று முறையில் நடைபெறும். போட்டிகளில் முதல் மற்றும் இரண்டாமிடம் பெறும் மாணவ மற்றும் மாணவியர் அணிகள் மாநில அளவிலான குடியரசு தின மற்றும் பாரதியார் தின குழு விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ள தகுதியுடையவர்கள்.

மேற்காணும் தகவலை புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**